17.03.2026 OS.No.162/2021 PW1 Name :.**சரளா**

குறுக்கு விசாரணை

1. என் கணவர் மணி 14.10.2023ல் இறந்துள்ளார். அதன் பின்னர் தான் வழக்கு சம்மந்தமான விவரங்கள் எனக்கு தெரியும். மற்ற வாதிகளுக்கும் வழக்கு விவரங்கள் என் கணவர் இறந்த பின்னர்தான் தெரியும். வழக்கில் என் கணவர் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை நான் தனியாக மனு போட்டு பார்க்கவில்லை. வழக்கு கடனுறுதி சீட்டு ஜூலை 2021ல் தயார் செய்யபட்டது என்றால் அது எனக்கு தெரியாது. செந்தில்பாபு என்பவர் எங்கள் தெருவில் குடியிருந்தார்.
2. என்னுடைய வீட்டின் மேல்மாடியில் வாடகைக்கு இருந்தார். சுமார் 1 1/2 ஆண்டுகளுக்கு பின் காலி செய்தார். ஜூலை 2021லிருந்து தெரியும். அவர் வாடகைக்கு இருந்த காலத்தில் தான் தாவா கடனுறுதி சீட்டு எழுதபட்டது. என்னுடைய வீட்டில்தான் என் எதிரில் கடனுறுதி சீட்டு எழுதபட்டது. எழுதிய ஒருவார காலத்தில் தான் பிரதிவாதிகள் மீது என் கணவர் வழக்கு போட்டுள்ளார். சாட்சிகள் சரவணன் மற்றும் சங்கர் ஆகியோர்கள் சுமார் 4, 5 ஆண்டுகளாக எனக்கு தெரியும்.
3. இஸ்மாயில் பெயரில் உள்ள சொத்து விவரம் எனக்கு தெரியும். பிள்ளையார் கோவில் அருகில் கடை உள்ளது. எந்த சர்வே எண்ணில் எவ்வளவு விஸ்தீரணத்தில் அந்த சொத்து உள்ளது. அதன் கதவு எண். 21எ. அதற்கான ஆவணத்தை நான் இதுநாள்வரை பார்க்கவில்லை. யார் பெயரில் அந்த ஆவணம் உள்ளது என்று எனக்கு தெரியாது. என் கணவரின் வாரிசு சான்றிதழ் தாக்கல் செய்துள்ளேன். அவ்வாறு

சான்றிதழ் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றும் அது கிடைத்தால் தான் வழக்கு தொடரமுடியும் என்றால் சரியல்ல.

4. பிரதிவாதிகளின் பெயர் எனக்கு தெரியாது என்றால் ரசியா, சல்மான், ஷிலின், கௌசர் ஆகியோர்கள். கடனுறுதி சீட்டில் ரூ.1 –க்கான ஸ்டாம்பில் கையெழுத்து போடபட்டுள்ளது. அது மோசடியான கையெழுத்து என்று சொன்னால் சரியல்ல. கடனுறுதி சீட்டில் தேதியில் திருத்தி எழுதபட்டுள்ளது. 2010த்தை 2018என திருத்தியுள்ளார்கள் என்றால் தவறாகும். தேதியை ஒருநபரும் மற்ற விவரங்களை ஒருநபரும் எழுதியுள்ளார்கள் என்றால் அவ்வாறு இல்லை.
5. நான் பத்தாம் வகுப்பு படித்துள்ளேன். கடனுறுதி சீட்டில் இடதுகை பெருவிரல் கைரேகை எதுவும் வாங்கவில்லை. கடனுறுதி சீட்டில் உள்ள கையெழுத்து இஸ்மாயில் போட்டதாகும். அதை ஆய்விற்கு அனுப்ப எனக்கு ஆட்சேபனை இல்லை. கடனுறுதி சீட்டை மோசடியாக தயார் செய்து என் கணவர் வழக்கு போட்டுள்ளார் என்றால் அவ்வாறு இல்லை.
6. ரூ.4,50,000/– பணம் என் கணவரின் கணக்கில் இருந்தது இல்லை என்றால் எங்கள் வீட்டில் இருந்தது. அது என் கணவரின் பணமா அல்லது என்னுடைய பணமா என்று குறிப்பிட்டு சொல்லமுடியாது. நாங்கள் வட்டிக்கு பணம் கொடுப்போம். குடும்ப சூழ்நிலையின் காரணமாக இஸ்மாயில் பணம் வாங்கினார். சுமார் 4, 5 நபர்களுக்கு வட்டிக்கு பணம் கொடுத்துள்ளோம். அவர்களிடம் கடனுறுதி சீட்டு எழுதி வாங்கியுள்ளோம். அதில் யார் சாட்சிகள் போட்டுள்ளார்கள் என்று எனக்கு தெரியாது.

7. மற்ற கடனுறுதி சீட்டுகளை யார் எழுதினார் என்று எனக்கு தெரியாது. இஸ்மாயில் கையெழுத்து உள்ள பதிவு செய்யபட்ட ஆவணத்தையும் கடனுறுதி சீட்டில் உள்ள கையெழுத்தையும் ஆய்விற்கு அனுப்ப எனக்கு ஆட்சேபனை இல்லை. என் கணவரும் சாட்சிகளும் சேர்ந்து மோசடியாக ஆவணம் தயார் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. பொய் வழக்கு போட்டுள்ளோம் என்றால் சரியல்ல.

மேற்படி சாட்சியின் வாக்குமூலம் திறந்த 17/03/2026 இவ்வழக்கரங்கில் என்னால் சொல்ல சொல்ல தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கபட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு கையொப்பம்/கைரேகை செய்யப்பட்டது.

RAJA B

SUBORDINATE JUDGE, VANIYAMBADI
Digitally signed by RAJA B
Location: THIRUPATHUR
Date: 2026.03.17 14:51:24 +0530

சார்பு நீதிபதி
வாணியம்பாடி.